இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 1, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

1—

அணைகளைத் தூர் வாருதல்

***30661—டாக்டர் தே. குமாரதாஸ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2 அணைகளைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தூர் வாரப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில்*

2005 பிப்ரவரி 2]

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1 மற்றும் சிற்றாறு-2 ஆகிய அணைகளை தற்போது தூர் வாரத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1 மற்றும் சிற்றாறு-2 ஆகிய இந்த அணைகள்தான் விவசாயத்திற்கு ஜீவநாடியான அணைகள். ஆனால், பேச்சிப்பாறை அணை 100 ஆண்டுகளைத் தாண்டிய அணை. அதேபோல, பெருஞ்சாணி 57 ஆண்டுகளைத் தாண்டிய அணை. சிற்றாறு 1-ம், 2-ம் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளைத் தாண்டிய அணைகள். இதிலே பேச்சிப்பாறை அணை மிகவும் பெரிய அணையாக இருக்கிறது. அது கிட்டத்தட்ட 20 அடி ஆழம் மணலால் நிரப்பப்பட்டு இருக்கிற சூழ்நிலையில், அணையினுடைய கொள்ளளவு வெகுவாகக் குறைந்திருக்கிறது. எனவே, அந்த அணைகள் தூர் வாரப்படும் என்று சொன்னால், கொள்ளளவு, catchment area அதிகமாகி, நீர்க் கொள்ளளவோடு அதிகமாக விவசாயமும் செய்கிற ஒரு சூழ்நிலை ஏற்படும். கிட்டத்தட்ட 96,000 ஏக்கரில் இந்த 4 அணைகளையும் நம்பித்தான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நடைபெறுகிறபோதுதான் என்னுடைய தொகுதியில் மாத்திரம் கிட்டத்தட்ட 20, 30 குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு இருக்கின்றன. விவசாயிகளினுடைய நம்பிக்கையே இந்த அரசின் மீதுதான் வந்திருக்கிறது. குளங்களை ஆழப்படுத்திய காரணத்தினாலே தண்ணீரினுடைய கொள்ளளவு அதிகமாகி, நிலத்தடி நீரினுடைய அளவும் உயர்ந்து இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், மீண்டும் அந்த நம்பிக்கை வளர்வதற்காகவும், விவசாயம் செழிப்பதற்காகவும், பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகள் நிவாரணம் பெறுவதற்காகவும் நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன். எங்களுடைய மாவட்டம் மிகச் சிறிய மாவட்டம். ஆனால், அணைகளுடைய, Channel-களுடைய நீளம் என்று பார்க்கின்றபோது 500 கி.மீ. கடைவரம்புப் பகுதிகள் வரைக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நமக்குப் பணம் செலவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் எடுக்கலாமென்று சொன்னால், நமக்கு வருமானம் தான் வரும். அதில் இருக்கின்ற மணலைப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்வதற்குக்கூட மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, ஒரு check-post போட்டு, பணத்தை வசூல் செய்து கொண்டு,

அணைகளைத் தூர் வாரலாமென்று நீங்கள் ஆணைகளைப் பிறப்பித்தால், அரசாங்கத்திற்கு வருமானமும் வரும்; தேவையான அளவுக்கு விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரின் கொள்ளளவும் அதிகப்படுத்தப்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணை 1906 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட நிலையில், dead storage 956 மில்லியன் கன அடியாக இருந்தது. தற்போது பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் பொதுப் பணித் துறை நீரியல் ஆய்வு மையம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், இவ்வணைகளைத் தூர் வாராததால் மிகக் குறைந்த, அதாவது 7 சதவீதக் கொள்ளளவுக் குறைவே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சிற்றாறு-1 மற்றும் 2 அணைகள் 1970 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டவை. இவற்றில் முறையே, 217 மில்லியன் கன அடி, 409 மில்லியன் கன அடி அளவில் dead storages உள்ளன. இவை அனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது பாசனத்திற்குப் பயன்படும் நீரின் கொள்ளளவு பாதிக்கப்படாது எனத் தெரிய வருகிறது. எனவே, தற்போது மேற்கண்ட அணைகளைத் தூர் வாரத் தேவையில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துகளை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 7 சதவீதக் கொள்ளளவு என்று சொல்கிறபோது, அந்த மாவட்டத்திலேயே மிகப் பெரிய அணை பேச்சிப்பாறை அணைதான். 7 சதவீதம் தண்ணீர்க் கொள்ளளவுதான் குறைகிறது என்று சொன்னால்கூட, அது பல ஆயிரம் ஏக்கர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். மற்றும் ஒன்று. இதற்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் இன்னும் ஒரு கேள்வியை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நெய்யாறு இடதுகரை சேனல், இது கேரளாவிலிருந்து வரக்கூடிய தண்ணீர். 55 ஆண்டுகளாகத் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. கடந்த ஜனவரி மாதம் முதல் கேரள அரசு தண்ணீர் தராமல்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2005 பிப்ரவரி 2]

தடுத்துவிட்டது. எனவே, அதன்மூலமும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விவசாயம் பாதிப்பு அடைகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். உடனடியாக அந்தத் தண்ணீரும் கிடைக்கும் என்று சொன்னால், 10,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும்; விவசாயிகள் பயன்பெறுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, மீண்டும் அதை மறுபரிசீலனை செய்து, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, 2 அணைகளை ஆழப்படுத்த முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை தொடர்பாக, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின்.

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட விவசாயிகளுடைய ஜீவநாடியாக இருக்கக்கூடிய பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் தூர் வாரப்படாமலும், அதே நேரத்திலே, சரியான முறையிலே பராமரிப்பு இல்லாத ஒரு நிலையிலும் இருந்து வருகின்றது. ஏற்கெனவே ஒரு முறை 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அந்த மதகுகளிலே ஒரு chemical coating போடப்பட்டது. அதற்குப் பிறகு கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அதிலே shutters போடப்பட்டன. ஆனால், பேச்சிப்பாறை அணையிலேயிருந்து விவசாயத்திற்காகத் தண்ணீர் வரக்கூடிய அந்தக் கால்வாய்களிலே பல இடங்களிலே நீர்க் கசிவு ஏற்பட்டு இருக்கின்றது. அதைப்போல, அந்தக் கால்வாய்கள் பிரியக்கூடிய இடங்கள், அதாவது புத்தன் dam, பாண்டியன் கால்வாய், வி.பி. கால்வாய், தோவாளை, அனந்தனாறு போன்ற கால்வாய்கள் பிரியக்கூடிய இடத்திலே இருக்கக்கூடிய மதகுகளிலும் நீர்க் கசிவு அதிகமாக இருக்கின்றது. இப்படி கால்வாய்களிலும், மதகுகளிலும் பெரும் அளவிலே நீர்க் கசிவு இருக்கின்ற காரணத்தால், கடைவரம்புப் பகுதிகளுக்குத் தண்ணீர்

வருவது பாதிக்கப்படுகின்றது. இதனால் கடைவரம்புப் பகுதிகளில் உள்ள விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். அதே நேரத்திலே, அங்கே தண்ணீர் வராத காரணத்தால் நிலத்தடி நீரும் உப்பாகக்கூடிய ஒரு நிலை இருந்து வருகின்றது. எனவே, இந்த நிலையை, அவசியத்தைக் கருத்திலே கொண்டு, கடைவரம்புப் பகுதி வரை தண்ணீர் வரக்கூடிய வகையிலே பேச்சிப்பாறை அணையிலேயிருந்து விவசாயத்திற்கு வரக்கூடிய கால்வாய்கள் மற்றும் தலைமதகுகள் அத்தனையையும் உடனடியாகச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி கடைமடைப் பகுதி வரை நீர் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்; நீர்க் கசிவு ஏற்படுவதும் நடப்பு ஆண்டிலே தடுத்து நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணையினுடைய கொள்ளளவு குறைந்து போய்விட்டது என்பது சில வருடங்களுக்கு முன்னாலே நம்முடைய மாமன்றத்திலே எடுத்துவைக்கப்பட்ட ஒரு பிரச்சினை ஆகும். ஏனென்றால், கோதையாற்றிலே மின்சார உற்பத்திக்கான ஏற்பாட்டைச் செய்கின்ற காலத்தில், அது வழியாக வந்த அந்த மண் பூராவும் இதனுடைய தாய் ஆறு வந்து சேருகின்ற பகுதி, அந்தப் பகுதியை அந்த ஊர் மக்கள் சொல்வது, யானைப் பூண்டி என்று. ஒரு காலத்திலே யானைகூடச் செல்லமுடியாத அளவிற்குத் தண்ணீர் இருந்தது. இப்போது அது கால்பந்தாட்ட மைதானமாக இருக்கின்றது. அதனுடைய துவக்கம், அந்த அடிப்படையிலே 20 அடிக்கு மேல் மண் நிரம்பியுள்ளது. எனவேதான், விவசாயிகளுடைய நலனைக் கருதி, தூர் வாரவேண்டிய ஒரு கட்டாயக் கடமையாக மாறியுள்ளது. அதுபோன்று, 100 ஆண்டுகளைத் தாண்டிய இந்த அணையில், வருடாவருடம் leakage என்ற பெயரில் நம்முடைய அரசு இலட்சக்கணக்கான ரூபாயில் சிமென்ட் கலவை வைத்து அடைக்கின்ற பணியினைச் செய்து வருகின்றது. அந்த அணைகூட பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, அணையை இன்னும்

2005 பிப்ரவரி 2]

கட்டவேண்டிய, ஒரு சாரணை கட்டவேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாகியுள்ளது. அப்போதுதான் நாஞ்சில் நாடு பகுதியில், முழுமையாக வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயிகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அனைத்து அணைகளும் வருடந்தோறும் பழுதுபார்க்கப்பட்டு, அணைகள் பாதுகாக்கப்பட்டு, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், அணையில் ஏதாவது நீர்க் கசிவு இருக்குமேயானால், அது இவ்வாண்டிலேயே சரி செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அணைகளை தற்சமயம் தூர் வாருவதற்கு அவசியம் ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலிலே கூறினார்கள். அதுபோல, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிலே இருக்கின்ற அணைகள் பல்வேறு இடங்களிலே இன்றைக்குத் தூர் வாரப்படுகின்ற ஒரு சூழ்நிலையில், மணலாலும், சேற்றினாலும் நிரப்பப்பட்டு இருக்கிறது என்கின்ற தகவல்கள் இருக்கின்றன. குறிப்பாக, நமது தேனி மாவட்டம், வைகை அணையில்கூட அப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பதாக அறிகிறோம். எனவே, இந்த நிலைகளையெல்லாம் அறிந்து, பொதுவாக தமிழகத்திலே இப்படி தூர் அதிகமாகப் படிந்திருக்கின்ற அணைகளைக் கண்டறிந்து, தூர் வாருகின்ற நிலையை அரசு மேற்கொள்ளுமா என்பதோடு, நமது ஈரோடு மாவட்டத்திலே ஓரத்தப்பாளையம் அணை ஒன்று இருக்கிறது. அது விவசாயத்திற்காக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா விவரத்தையும் கேட்டீர்கள் என்றால், அமைச்சரிடத்திலே பதில் இருக்காது. அதற்கெல்லாம் தனிக் கேள்வி போடுங்கள்.

[2005 பிப்ரவரி 2

வினா எண் 2, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடு)

திரு. லா. சந்தானம்: *வைகை அணையில் தூர் வார அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கின்ற அனைத்து அணைகளையும், ஏரி, குளங்களையும், அது கட்டி முடிக்கப்பட்டபோது என்ன கொள்ளளவு இருந்தது? தற்போது எந்த அளவிற்குக் கொள்ளளவு இருக்கிறது? பாசனத்தினுடைய நீரின் அளவு எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதனைக் கண்டறிய பொதுப் பணித் துறையின் மூலமாக நீண்ட ஆய்வு செய்வதற்கு உத்தரவு தரப்பட்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி முடிந்தவுடன், சபைக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 2, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

2—

கட்டட வசதி

•35920—திருமதி வி. அழகம்மாள்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கெங்கவல்லி வட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில்*